சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2014–2015 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகள் – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரண–சாரணியர் இயக்கத்தினை செயல்படுத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண்.19

நாள் : 23.02.2015

ஜய, மாசித் திங்கள் 11 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது :

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். க1/23257/2014, நாள் 26.08.2014.

********

ஆணை:–

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 22.07.2014 அன்று சட்டமன்றப் பேரவையில் 2014–2015 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளிக்கையில் 13 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரணர் சாரணியர் இயக்கத்தினை சீரிய முறையில் செயல்படுத்திட ஒரு பள்ளிக்கு ரூ.55,000/– வீதம், 207 பள்ளிகளுக்கு ரூ.113.85 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

2. மேற்கண்ட புதிய அறிவிப்பு தொடர்பாக மேலே படிக்கப்பட்ட ஆதி திராவிடர் நல இயக்குநர் அனுப்பியுள்ள கருத்துருவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் 107 உயர்நிலைப் பள்ளிகளில் தோராயமாக 7500 மாணவர்களும், 7100 மாணவியர்களும் (மொத்தம் 14600), 100 மேல்நிலைப் பள்ளிகளில் 26700 மாணவர்களும், 24900 மாணவியர்களும் (மொத்தம் 51600) கல்வி பயின்று வருகின்றனர் என்றும், இப்பள்ளிகளில் கல்வி பயின்று வரும் மாணவ, மாணவியர்களுக்கு தோழமை உணர்வு மேம்படவும், நற்சிந்தனைகள்

வளரவும், சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் எண்ணம் உருவாகவும், மேற்கண்ட 207 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரண–சாரணியர் இயக்கத்தை செயல்படுத்துவது அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார். அந்த அடிப்படையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 207 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், ஒவ்வொரு பள்ளியிலும் 32 மாணவ, மாணவியர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து சாரண–சாரணியர் இயக்கத்தை செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறும், இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.113.85 இலட்சம் ஒப்பளிக்குமாறும் ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 2014–2015 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், ஆதி திராவிடர் நல இயக்குநரின் கோரிக்கையை ஏற்று, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் 207 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், சாரண–சாரணியர் இயக்கத்தை சீரிய முறையில் செயல்படுத்திட ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த செலவினமாக, இவ்வாணையின் இணைப்பில் உள்ளவாறு ஒரு பள்ளிக்கு ரூ.55,000/– என்ற அடிப்படையில் 207 பள்ளிகளுக்கு மொத்தம் ரூ.1,13,85,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> 2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – I திட்டத்தில் சேராதது – BE சாரண சாரணியர் இயக்கம் – 09 உதவித்தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித்தொகை. (த.தொ.கு 2225 01 277 BE 0911)

5. மேலே பத்தி 4–ல் உள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு இயக்குநர், ஆதி திராவிடர் நல இயக்குநரகம் அவர்கள் மதிப்பீடு, கணக்கு மற்றும் நேரமைப்பு கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

6. சம்பந்தப்பட்ட சம்பளக்கணக்கு அலுவலர்/கருவூல கணக்கு அலுவலர் மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு நாளடைவில் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முன்பணத்தினை அனுமதிக்கும் ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மார்ச் 2015 வரையிலான காலத்திற்கு தேவையான தொகையினை முன்பணமாக பெறுவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில், இவ்வாணையின் படிகளை இணைத்து நிதித் (வரவு–செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும்,

இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2014–15 ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்த்திட ஏதுவாக துணை மானியக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதித் (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 207 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரண–சாரணியர் இயக்கத்தினை செயல்படுத்தியது குறித்த அறிக்கையினை தவறாமல் அரசுக்கு அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண்.3329/ஆதி(ம)பந/2015, நாள் 20.02.2015–ல் நிதித் துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 2547 (இரண்டாயிரத்து ஐந்நூற்று நாற்பத்து ஏழு) ஆகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35 (பெயரில்)

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அரசுச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 9.
நிதி (ஆதி (ம) பந / வரவு–செலவு பொது I (ம) II) துறை, சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 23/2/15

23/2/15

**இணைப்பு**
**அரசாணை (நிலை) எண். 19, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 23.02.2015**

**சாரண—சாரணியர் இயக்கத்தை செயல்படுத்துவதற்கான தொடரும் மற்றும் தொடராச் செலவினம் குறித்த விவரம்**

**(ஒரு பள்ளிக்கு)**

| வ.எண். | செலவு விவரம் | ரூ. |
|---|---|---|
| **1. சாரண—சாரணியர் இயக்கம் தொடங்குவதற்கு (ஒரு முறை செலவினம்)** | | |
| | குழு கொடி | 150 |
| | பெயர் பலகை | 500 |
| | கொடிக் கம்பம் | 500 |
| | மொத்தம் | 1,150 |
| **2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை** | | |
| | சீருடை (மாணாக்கர்களுக்கு ) 1 குழு (32x1290) | 41280 |
| | சீருடை (ஆசிரியர்களுக்கு) (1 x 1500) | 1500 |
| | மொத்தம் | 42,780 |
| **3. ஒவ்வொரு ஆண்டும் தொடரும் செலவினம்** | | |
| | பதிவு கட்டணம் (1 x 225) | 225 |
| | வருடாந்திர முகாம் செலவு (32 x 200) | 6400 |
| | வருடாந்திர ஆசிரியர் பயிற்சிக் கட்டணம் (1 x 1200) | 1200 |
| | சாரணியர் பயிற்சிக்கான பொருட்கள் பள்ளிகளில் வாங்கிவைத்து சாரணர்களுக்கு பயிற்சியின்போது கொடுத்தல் | 2000 |
| | இதர செலவினம் | 1245 |
| | மொத்தம் | 11,070 |
| | **கூடுதல் மொத்தம் (1+2+3)** | **55,000** |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

23/2/15